Registered as a NewsPaper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    பங்குனி 27    (09 - 04 - 1992)    வியாழக்கிழமை    ஓசை: 51

## முகாம்களில் இடநெருக்கடி தொற்றுநோய் அபாயம்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள புகையிரத நிலையம், தாண்டிக்குளம், வேப்பங்குளம் அகதி முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து திரும்பிய 655 குடும்பங்கள் இப்பொழுது இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழகத்திலிருந்து திருமலை வந்துசேர்ந்த 270 குடும்பங்கள் இங்கு தங்கவைக்கப்பட உள்ளன. இதனால் இடநெருக்கடி அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இதேவேளை இங்கு நிலவும் கடும் வரட்சி காரணமாகத் தொற்று நோய்களும் பரவி வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழீழ மக்களின்

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குக

# ஐ. நா. கமிஷனிடம் வேண்டுகோள்

(ஜெனிவா)

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு ஐ. நா. மனித உரிமை கமிஷனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா. மனித உரிமை கமிஷனின் 47ஆவது கூட்டத் தொடரின்போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை தமிழீழ மக்களின் சார்பில் சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் முன்வைத்தது.

“தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இன அமைப்பையுடைய மக்கள் கூட்டம் என்பதால் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும், இதனை ஐ. நா. ஸ்தாபனம் அங்கீகரிக்க வேண்டுமென்றும் இந்த அரச சார்பற்ற அபிவிருத்தி நிறுவனம் வலியுறுத்தியுள்ளது. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழீழ மக்கள் எதிர்கொண்டு வரும் இன ஒடுக்கு முறையின் கொடூரத் தன்மைகள் பற்றியும் இந்த நிறுவனம் எடுத்து விளக்கியது. இந்தக் கூட்டத் தொடரில் தமிழர் சார்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கு சிறிலங்கா சார்பில் பதிலளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு பிறேமன்

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் வீரவேங்கை பிறேமன் (இராசையா தேவதாஸ், பழகாமம்) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## துப்பாக்கி மீட்பு

கனகராயன் குளக் காட்டுப்பயில் இராணுவத் தளபாடங்கள் பல விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் அப் பகுதிக்கு சென்ற விடுதலைப் புலிகள் ரி-56 ரகத் துப்பாக்கியொன்று, ஐம்பத்து ஐந்து நடுத்தர ரவைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## ரஞ்சன் கொலை வழக்கு 27 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொலை வழக்கு இம் மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்தவருடம் மார்ச்மாதம் கொல்லப் பட்டதை யொட்டி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மூன்று குற்றச் சாட்டுக்கள்சுமத்தப்பட்டுறொபின் என்று அழைக்கப்படும் ஜெகநாதன் அல்லதுதயாபரன் என்பவர்மீதான வழக்கு கொழும்பு உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

சாதிர் என்று அழைக்கப் படும் அருணாசலம்சுரேந்திரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து யாழ். இளைஞர்கள் கந்தானையில் கைது

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் ஐந்து யாழ்ப்பாண இளைஞர்கள் கந்தானையில் கைது செய்யப் பட்டுள்ளதாக கந்தானைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மத்துமகல, கொங்கபொக்குண ஆகிய இடங்களிலுள்ள வீடுகளில் வசித்து வந்த இந்த இளைஞர்கள் மானிப்பாய், தெல்லிப்பளைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும்,

இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளதா என்பது பற்றி தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் வியாபார நோக்கில கொழும்பு வந்ததாக கூறியுள்ளனர்.

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் இருக்கும் புலோலி உபய கதிர்காமம் பகுதியில் இன்று தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும், நினைவஞ்சலிக் கூட்டமும் நடை பெறவுள்ளது.

காலை எட்டுமணி தொடக்கம் பிற்பகல் நான்குமணி வரை தொடரும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மாலை ஏழு மணியளவில் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது.

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பாஸ்கரன், இளங்கீரன். அரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர் இதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது.

## இராணுவத்தினுள் முரண்பாடு; பல அதிகாரிகள் விலகலாம்

(லண்டன்)

கூட்டு நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தின் பொறுப்புமுப்படைத் தளபதிகளிடம் வழங்கப்படும் என்று ஜனாதி

டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவிக்கிறது. இதனையடுத்துப் பல முக்கிய உயர் இராணுவ அதிகாரிகள் இராஜினாமாச் செய்யலாம் என்றும் தெரிவிக்

றம் செய்வதென ஜனாதிபதி எடுத்த முடிவை இராணுவத்தில் கடும் போக்குடைய அதிகாரிகள் வரவேற்கிறார்கள்.

## வவுனியாவில் பொலிஸ் கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் மக்களைக் கைதுசெய்யும்பொலிசாரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. வவுனியாவில் வசிக்கும் பொது மக்களும் உள்ளே நுழைபவர்களும் பொலிஸ் அனுமதி பெறவேண்டும் எனக்கூறி பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக் கெடுபிடிகளால் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரிடமும், சமூக விரோத சக்திகளிடமும் ஒப்படைக்கப்படுவதாக தெரியவருகின்றது.

## தொண்டர் ஆசிரியர்

## இலங்கைக் கடலில்

இளைஞர்கள் மானிப்டாய், தெல்லிப்பளைப் பகுதிகளைச் ... பார நோக்கில கொழும்பு வந்ததாக கூறியுள்ளனர்.

... கூட்டு நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தின் பொறுப்புமுப்படைத் தளபதிகளிடம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எடுத்த முடிவை அடுத்து இராணுவத்தினுள் பிளவு ஏற்பட் ... பல முக்கிய உயர் இராணுவ அதிகாரிகள் இராஜினாமாச் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், முன்பிருந்த கட்டுப்பாடு ஏற்பாடுகளில் மாற் ... தில் கடும் போக்குடைய அதிகாரிகள் வரவேற்கிறார்கள். மற்றவர்கள் முடிவை எதிர்க்கிறார்கள் என்றும் பி.பி.ஸி. தெரிவிக்கிறது.

## தொண்டர் ஆசிரியர்

# நிரந்தர நியமன மறுப்பு ஓர் இனப் புறக்கணிப்பே

### தமிழீழ ஆசிரியர் கண்டனம்

(கிளிநொச்சி)

தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க சிறிலங்கா அரசு மறுப்பது ஓர் தேசிய இன உரிமைப் புறக்கணிப்பாகவே கருதுகின்றோம். எமது சிறார்களின் கல்விச் சீரழிவிற்கு எதிராக சமூக விளிப்புள்ள அனைத்து மக்களும் கல்வி நிர்வாக அதிகாரிகளும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் என கிளிநொச்சி மாவட்ட தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது 1971 இல் க. பொ. த. உயர் தரத்தில் இனரீதியான தரப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புதிய ராணுவ தந்திரோபாயம்; கிழக்கின்மீது பாரிய தாக்குதல்

### பெருமளவில் மக்கள் மடியலாமென அச்சம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் புதிய தந்திரோபாயத்தின் படி கிழக்கிலங்கையில் பாரிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம்எனத்தெரியவருகின்றது.

இப்புதிய இராணுவ தந்திரோபாயத்தின்படி வடமாகாணத்தில் இப்போது செலுத்தப்பட்டு வரும் கவனம் உடனடியாக கிழக்கு மாகாணத்திற்குத் திருப்பப்படும் என்றும், வடமாகாணத்திலிருந்து படைத்தொகுதிகள் சில கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்படலாம் என்றும் தெரிய வருவதாகவும் பி. பி. சி. தெரிவித்தது.

சிறிலங்கா இராணுவம் வகுத்துள்ள இப்புதிய தந்திரோபாயத்தால், கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் பொது மக்கள் உயிரிழக்கலாம் என இராணுவ வட்டாரங்களில் சிலர் கருதுவதாகவும்பி.பி.ஸி. அறிவித்தது.

கிழக்கில் தீவிர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளை மூன்று மாதங்களில் ஒழிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அதன் பின்னர் தேர்தல் நடாத்தத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள்

### பத்திரிகையாளர் அவதானிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கடற் பிராந்தியத்திற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்பதை பத்திரிகையாளர்கள் நேரில்கண்டதாக கொழும்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது சிறிலங்கா இராணுவத்தினரால் தீவகப் பகுதிகளுக்கென கொழும்பிலிருந்து கூட்டிவரப்பட்ட பத்திரிகையாளர்களே இத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையின் கடற் பிராந்தியத்தில் இந்திய மீனவர்களை கைது செய்வது மற்றும் அவர்களது படகுகளைப் பறிமுதல் செய்வது போன்றவற்றில் ஈடுபடுவது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உடுகம்பொல ஆஜராகும் காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல சி. ஐ. டி பொலிஸார் முன் ஆஜராவதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு அவகாசம் இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 6 ஆம்திகதி இவரை சி. ஐ டி பொலிஸ்முன் ஆஜராகும்படி நீதிமன்றம் ஆணையிட்டிருந்தது. ஆனால் உடுகம்பொல ஆஜராகத் தவறியதால் இன்றுவரை காலக்கெடுவை நீடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நீடிப்பதற்கான மனுவை இரகசியப் பொலிஸைச் சேர்ந்த ஏ. எஸ். பி. என். எஸ். மெண்டிஸ் மாளிகாகந்தை நீதிமன்றில் கடந்ததிங்கட்கிழமை சமர்ப்பித்தார். நீதிவான் இந்த மனுவை ஏற்று குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்கினார். இது சம்பந்தமான வழக்கு விசாரணை ஏப்ரல் 27 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மயிரிழையில் தப்பினார் அரபாத் பாலைவனத்தில் விமான விபத்து

(திரிப்போலி)

பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் பயணம் செய்த விமானம் லிபியாவின் தென் பகுதியில் நேற்று முன்தினமிரவு விபத்துக்குள்ளாகியது. ஆனாலும் ஜனாப் யாசீர் அரபாத் எந்த ஆபத்துமின்றி நலமுடன் இருப்பதாக பாலத்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதியொருவர் நேற்று நண்பகல் திரிப்போலியில் அறிவித்தார்.

லிபியாவின் தென்பகுதியில் சகாரா பாலைவனத்திற்கு மேலே மணற் புயலில் சிக்கிய இந்த விமானத்தை அமெரிக்காவின் செய்மதியொன்று கண்டு பிடித்து அறிவித்தது.

யாசீர் அரபாத் பயணம் செய்த இவ் விமானம் மணல் காற்றில் சிக்கிக் கொண்டமையால் விபத்து நேரிட்டதாகவும், விமானம் கட்டாயமாகத் தரையிறக்கப்பட்டது.

இவ் விபத்தில், பாலத்தினிய விடுதலை இயக்கத் தலைவர் பயணம் செய்த விமானத்திலிருந்த விமான சிப்பந்திகள் மூவர் உயிரிழந்தனர் எனவும், யாசீர் அரபாத் சிறுகாயங்களுடன் உயிர்தப்பினார். பின்னர் அரபாத்திரிப்போலி வந்து சேர்ந்தார் எனத் தெரிய வந்துள்ளது.

தென் லிபியாவில் இருக்கும் பாலத்தீனிய பயிற்சி முகாமொன்றில் தங்கியிருந்த பாலத்தீனியர் விமானம் விழுந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்துநாள் தொடர்ச்சியான

# அடையாள உண்ணாவிரதம் இன்று நிறைவு பெறும்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தியாகச் சுடர் அன்னை பூபதி ஞாபகார்த்த அஞ்சலி கடந்த 10 நாட்கள் தொடர்ந்து அடையாள உண்ணா விரதம் நிலைய முன்றலில் நடைபெற்று வருகின்றது.

இன்று 9ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் அன்னதானம் வழங்கல் நிகழ்ச்சியுடன் இவ் உண்ணாவிரதம் முடிவடைகின்றது.

நிலைய முன்றலில் மாலை 7 00 மணிக்கு விசேட அஞ்சலிக் கூட்டமும் நிலையத் தலைவர் திரு. இ விஜயரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தமிழீழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில்

# அன்னை பூபதி நினைவு அடையாள உண்ணாவிரதம்

(வவுனியா)

வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தியாக தீபம் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சிகள் இடம் பெற்றுவருகின்றன.

ஓமந்தைப் பகுதியில் கடந்த ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 8 30 மணி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தென்னிலங்கைப் படுகொலைகள்

# அரசாங்கம் - உடுகம்பொல பரஸ்பரக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த 1987, 1988 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தபடுகொலைகள் குறித்து முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவும், அரசாங்கமும் பரஸ்பரம் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன. அண்மையில் ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினரால் அமைக்கப்பட்ட கறுப்புப் பூனைகளே படுகொலைக்கு காரணமென திரு உடுகம்பொல குற்றம் சாட்டியிருந்தது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சிறிலங்கா பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா வெளியிட்ட அறிக்கை ஒன்றில் உடுகம்பொல பதவி வகித்த பகுதிகளிலேயே படுகொலைகள் இடம் பெற்றதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா பிரதமர் விடுத்த அறிக்கையில்: பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி உடுகம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலை

இளம் யுவதி ஒருவர் அலரி விதை அருந்தி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் புத்தூர் இழக்கைச் சேர்ந்த எஸ். சிறிநந்தினி (வயது 20) ஆவார் இவரது தற்கொலைக்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவில்லை. (ச)


யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
ஈராண்டுப்பகுதி
நேரக் கல்விப்பட்டப்பின்
டிப்புளோமா
கற்கைநெறி
1991 / 92

புதியஅனுமதி

பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1992 - 05 - 15 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பானவிண்ணப்பப் படிவங்களைப்பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1992-06-21அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25மைல் சுற்றாடலில்அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை
முழுநேரக்
கல்விப்பட்டப்பின்
டிப்புளோமா
கற்கை நெறி
1991|92

புதிய அனுமதி

பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1992-05-15 இல் 50 வயதிலுக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறிதொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா. 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக்கல்விக்கிளையில் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடம்சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையின் நடாத்தப்படும்நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1992-06-21 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கல்விக் கிளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1992-05-15 ஆம்திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்பல்கலைக்கழகம்.
1992-04-07

(சி/4239)


## வரி விளம்பரம்


### விசேட கழிவு

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு எமது கைத்தறிப்புடைவைகள் வியாபாரிகளுக்கு விசேட கழிவில் வழங்கப்படும். பொது முகாமையாளர், யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில். (4240)

### HAPPY Tailors

புதுவருடத்தை முன்னிட்டு வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி! இன்றைய நவநாகரிக வாலிபர்களின் சேர்ட்,ஜீன்ஸ். சோர்ட்ஸ் என்பன அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் தைத்துக் கொடுக்கப்படும். சேர்ட், ஜீன்ஸ், Tசேட் என்பன குறைந்த விலையில் ரெடிமேற்ஆகவும்பெற்றுக்கொள்ளலாம். ஹப்பி - தையல் அகம் கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். (2432)


## திருட்டு

கரணவாயில் சோமசுந்தரம் என்பவரின் பலசரக்குக் கடையில்கடந்ததிங்கட்கிழமைஇரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. கடையின் கதவை உடைத்த திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் 2000 ரூபாரொக்கப்பணத்தையும் கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன் கதவிலிருந்த பூட்டுக்களும் கழற்றிச் செல்லப்பட்டுள்ளன என தெரிவிக்கப் படுகிறது.

## ஆண்டுக் கூட்டம்

(குருநகர்)

யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சின்னக் கடை வடக்கு வீதியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

பிரதம அதிதிகளாக தமிழீழக் காவற்றுறை பொறுப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

அனுமதி பெற்ற சகல வியாபாரிகளையும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார். (21)


அன்னை பூபதியின்
4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி


# விசர் நாய்களைக் கொல்ல நச்சுவாயு வண்டி

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்களைக் கொலை செய்வதற்கு நச்சுவாயுவண்டி தயாரிக்கும் பணி வெற்றியளித்துள்ளதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக இவ் வாகனத்தை வடபகுதிக்கு வழங்க அரசுமறுத்து வந்தது தெரிந்ததே. தற்போது இங்கு அதிகரித்து வரும் விசர்நாய்க்கடியால் ஏற்படும் அநியாய உயிரிழப்புகளைத் தடுக்கும் நோக்குடனேயே இவ் நச்சுவாயுவண்டிஉருவாக்கப்பட்டுள்ளது

வீதிகளில்காணப்படும் கட்டாக்காலிநாய்கள் பிடிக்கப்பட்டு இவ் வாகனத்திற்குள் போடப்பட்டதும் அவைஇறந்துவிடும் என தெரிவிக்கப் படுகிறது இவ்வண்டியை உருவாக்க முப்பதாயிரம்ரூபா செலவாகிறது என கூறப்படுகிறது. இவ்வண்டி தெல்லிப்பளைப் பகுதிஉதவி அரசஅதிபர் பிரிவில்சேவைக்கமர்த்தப் படவுள்ளது (ச)

## விசேட கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட தேசிய ஆசிரியர் ஒன்றியம், தனது கொத்தணிப் பொறுப்பாளர்கள் பாடசாலைப் பிரதிநிதிகள் இவர்களுடன் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் அனுமதிபெற்றதொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும், எதிர்வரும் 12 04.92 காலை9 00 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மண்டபத்திற்கு விசேட கூட்டம் ஒன்றிற்காக அழைக்கிறார்கள்.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை, தலைமையலுவலகம்

வாழைநார் பயிற்சி உதவி ஆசிரியர்


மேற்படி பதவிக்கு பின்வரும்உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள உதவி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும். அந்தந்தபிரிவுகளில்வாழைநார் பயிற்சியில் தேர்ச்சியும் அனுபவமும் ஆற்றலும் பெற்றவர்கள் விரும்பப்படுவர்.

1. நெடுந்தீவு 2. ஊர்காவற்றுறை
3. வேலணை 4. சங்கானை
5. சண்டிலிப்பாய் 6. தெல்லிப்பளை
7. உடுவில் 8. நல்லூர்
9. யாழ்ப்பாணம் 10. சாவகச்சேரி
11. கோப்பாய் 12. கரவெட்டி
13. பருத்தித்துறை 14. மருதங்கேணி
15. பளை

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி27.04.92.நேர்முகப் பரீட்சை 30.04 92 முற்பகல் 10.00மணிக்கு நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப் படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
07. 04. 92. -கௌரவ செயலாளர்
(சி/4245)


## 4-ம் ஆண்டு நினைவலைகள்




தியாகி அன்னை பூபதி
தமிழ்த்தாயின்
4-ம் ஆண்டு நினைவஞ்சலி

இடம்:- இணுவில் சந்தை முன்றல்

காலம்:- 09 - 04 - 1992 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு உண்ணாவிரத நிகழ்வும் மாலை 6.00 மணிக்கு பொதுக்கூட்டமும். மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்துவார்கள் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள்.

1. ''சந்தணக் கட்டைகள்'' நாடகம்
2. அருணா குழுவினரின் ''போர்க்கால ராகங்கள்'' இடம் பெறும்.

காங்கேசன்துறை,
(2431) மயிலிட்டி வாழ்மக்கள்.


## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 09

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

இதே தினத்திலிருந்து நான்கு நாட்களில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கையின்போது காணாமற் போன 21 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி, டளிபம்பொக்கணைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**கப்டன் பிரசன்னா** (அமரசேகரம் குணசேகரம் - திருநகர், கிளிநொச்சி.)

இதே சம்பவத்தின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கப்டன் அருண் / சந்துரு** (ஏரம்பு பாலச்சந்திரன் - புங்குடுதீவு )

பிரமந்தனாற்றில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைபபில் வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். அன்பு** (யோகராசா நடேஸ்வரன் - உதயநகர், கிளிநொச்சி.)

1991 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**வேணுகோபால்** (கணபதி தாசன் - திருக்கோணமலை )

மட்டக்களப்பு, தொப்பிகல் மலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் வசந்த்** (சின்னத்தம்பி திருமால் - சித்தாண்டி, மட்டக்களப்பு.)

**லெப். இன்பராஜ்** (சிதம்பரம்பிள்ளை விவேகானந்தராசா - கிரான், மட்டக்களப்பு )

**லெப். சக்தி** (நல்லதம்பி நடராசா - சித்தாண்டி, மட்டக்களப்பு.)

**2- ம் லெப். சுகந்தன்** (கதிர்காமன் வரதராஜா - சித்தாண்டி, மட்டக்களப்பு )

**ஆதித்தன் / ரகு** (நாகமணி சபேசன் - செங்கலடி, மட்டக்களப்பு )

டலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவுசெய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப் பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1992-05-15ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
1992 - 04 - 07

(சி/4238)

## 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



காந்திய நாட்டின்
காடையர் படையினர்
ஏந்திய கருவிகள்
எங்கும் உலாவரும்
வேளையிலும்
இந்த மண்ணின்
எழுச்சியைக் காட்டவே
பொங்கி எழுந்தொரு
காவியம் படைத்தாள்
எங்களின் அன்னையாய்
உயர்ந்தே நிற்கிறாள்!

மட்டுவில், சந்திரபுரம்,
சாவகச்சேரி.

கந்தசாமி
உழவு இயந்திரம்
சகோதரர்கள்.

(2429)

# எச்சரிக்கை

## கட்டாக்காலி நாய்களும் அவற்றால் ஏற்படும் ஆபத்துக்களும்


1. விசர்நாய்க்கடி நோயினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசத்தில் கடந்த இரு மாதங்களில் பத்துப்பேர் மரணித்துள்ளனர்.
2, பல நூற்றுக்கணக்கானோர் விசர்நாய்களினால் கடியுண்டிருக்கிறார்கள் விசர்நாயினாற் கடியுண்டோர் கட்டாயம் தடைமருந்து (A. R. V) எடுத்தல் வேண்டும்.
3. மனிதனில் இந்நோய் ஏற்படின் மரணம் நிச்சயம்.
4. எமது வளர்ப்பு நாய்கள் கட்டாயமாக கட்டி வளர்க்கப்படல் வேண்டும்
5. இப்பயங்கர வியாதி ஆடு, மாடு, பூனை, எலி, நரி, ஓநாய், வெளவால் போன்றவற்றாலும் பரவும் ஆபத்துண்டு.
6. கட்டாக்காலி நாய்கள் இம்மிருகங்களைக் கடிப்பதன் மூலம் அவற்றிற்கு இந்நோய் பரவமுடியும் எனவே கட்டாக்காலி நாய்கள் எங்கு காணப்பட்டாலும் அழிக்கப்படல் வேண்டும்.

வெளியீடு:

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

விசர்நாய்க்கடிநோய் கட்டுப்படுத்தும்
நடவடிக்கைக்குழு
யாழ்ப்பாணப் பிரதேசம்.

(சி-4244)



## கப்டன் - அருண்

### (ஏரம்பு பாலச்சந்திரன்)

பூவிரிந்தது போலச் சிரித்ததும்
போர்முகத்திலே போய்த் திரிந்ததும்
சாவிழுங்கிய சரித்திரம் ஆகுமோ?
சந்தம் வழிந்த கவிதை கிழியுமோ?
புல்முளைக்குமோ பேச்சுடன் போகுமோ?
போர்க்களத்திலே... புலிப்படை தோற்குமோ?
இல்லையென்று பல்லாயிரம் வேங்கைகள்
எழுந்து நிற்பது உனக்குத் தெரியுதோ?
இன்று உன்நினை வெம்மில் அழியுமோ
இல்லை இல்லையே என்று நீ எம்முடன்
வந்து வந்து மறுபிறப் பெய்தடா
வலிமை சேர்ந்திடப் பாலெமக் கூட்டடா
வென்று நாமொரு காவியம் பாடிடும்
வேளை வந்திடும் போதிலே... மீண்டுமோர்
கன்றெனத் தமிழ் ஈழத்து மண்ணிலே
கண்திறந்திடு காத்திருக்கின்றனம்

உன் நினைவுடன்

அப்பா, அம்மா, சகோதரர்கள்
சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள், உறவினர், நண்பர்கள்

(சி/4243)

**ஆதித்தன் / ரகு** (நாகமணி சபேசன் - செங்கலடி, மட்டக்களப்பு )

**புஸ்பராஜ்** (மாணிக்கப்போடி தர்மலிங்கம்- ஆயித்தியமலை, மட்டக்களப்பு)

**பத்மன்** (மு. சுரேஸ்குமார் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

**கண்ணன்** (வடிவேல் கண்ணன்-கிரான், மட்டக்களப்பு)

**விசாகன்** (சீனித்தம்பி தயாபரன் - மட்டக்களப்பு)

**சுதாகரன்** (றெய்சன் எலிங்டன் டில்மா- கல்முனை, பொத்துவில், அம்பாறை)

**ருக்மன்** (குழந்தைவேல், தயாபரன்-களுதாவளை)

**கைலன்** (கந்தக்குட்டி யோகநாதன்- மரப்பாலம், மட்டக்களப்பு)

**அசோக்** (செல்வராஜா நிர்மலராஜ்- வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

**அல்பேட்** (சின்னப்பா பிரான்சிஸ்-பதுளை)

**ராஜேந்திரன்** (வேலாயுதம் சுந்தரராஜன்- பொத்துவில், அம்பாறை)

**மனோ** (அழகையா சுந்தரத்தினம்- தளவாய், ஏறாவூர், மட்டக்களப்பு)

**தாஸ், நிசன்** (வைரமுத்து சுந்தரலிங்கம்- தாழங்குடா, மட்டக்களப்பு)

**மிதுரன்** (ரவீந்திரன்- ஏறாவூர், மட்டக்களப்பு)

**திலகன்** (சதாநிதி- பெரியகல்லாறு, மட்டக்களப்பு)

**நெடுமாறன்** (செல்லத்துரை சந்திரன்- அக்கரைப்பற்று, அம்பாறை)

**விதுவன்**

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட கொம்மாந்துறை 10 ஆம் கட்டை வீதியைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள், மற்றும் ஈரலிக்குளம் வாசியான தமிழ் விவசாயி.

ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4242)

## சிந்தனைக்கு

மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர, தியாக உணர்வு கொண்ட ஆன்மாக்கள் ஒரு சிலர் தான், சுதந்திரத்தை எப்பொழுதுமே போராடிப் பெறுவர்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 09-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# சதி ஆலோசனை

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து நிற்கும் தமிழ் குழுக்களை எவ்வாறு பயன்படுத்துவதென்பது பற்றிக் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டது. இச் சதியாலோசனைக் கூட்டத்தில் இராணுவத்தளபதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், புலனாய்வுத் துறையினர், பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்."

அண்மைக்காலத்தில் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களும் வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான போர் முறையில் புதிய தந்திரோபாயங்கள் பற்றியும் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் சிறிலங்கா ஆயுதப்படைகளின் உயர் கட்டளை இடும், மற்றும் கட்டுப்படுத்தும் முறையில் பெரும் மாற்றங்களைச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார். இம் மாற்றத்தினால் வடக்குக் கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுப்படைத் தலைமையகம் கொண்டிருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளுக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக் கட்டளையிடும் கட்டுப்படுத்தும் மாற்றம் புலிகளுக்குஎதிரான புதிய யுத்தத்தின் தந்திரோபாயம் என இராணுவ வட்டாரங்களில்தெரிவிக்கப்படுகின்றது. இத் தந்திரோபாயத்தின் ஒரு தொடராகவே அரசாங்கத்துடன் தங்கியுள்ள தமிழ் குழுக்களுடனான சந்திப்பு ஆகும். இவ்வருட ஆரம்பத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பாரிய ஒரு தாக்குதலுக்குத் தயாராக இருந்த சிறிலங்காவின் இராணுவ இயந்திரம் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான அதிரடித் தாக்குதலினாலும், 'சஜபார' (ஒப்பறேசன் சிக்சர்) இராணுவ நடவடிக்கைகளினாலும் சீர்குலைவை அடுத்தே இப்புதிய தந்திரோபாயத்தை பாதுகாப்பு வட்டாரங்கள் சிந்திக்க வேண்டிவந்தது.

ஆனால் இப்புதிய தந்திரோபாயத்தில் இதுவரை சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் மேற்கொண்டுள்ள மாற்றங்களும், தந்திரங்களும் புதியவை எனக்கூறிவிட முடியாது. அதிகாரம் என்னிடம் இல்லை. அதுவே எனது தோல்விக்குக் காரணம் என்ற சாட்டை இம் மாற்றங்கள் சில வேளை குறைக்கலாம். ஆனால் இதன் மூலம் அரசு விரும்புவதுபோல் இப்பிரச்சினைக்கு இராணுவதீர்வு கண்டுவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

# அமைச்சர் ரஞ்சன் கொலையுண்டமை எனதுகெட்டகாலமே

## —முன்னாள் டி. ஐ.ஜி. உடுகம்பொல

லியனாராச்சி சட்ட விசாரணை நடந்து கொண்டிருந்த சமயம் குற்றம்சுமத்தப்பட்ட சுப்பிரின்டன்ட் தர்மதாஸாவுக்கு இங்கிலாந்திலிருந்துவழக்கறிஞரை அழைக்கப் பாதுகாப்புநிதிஒதுக்கீட்டிலிருந்து அரசு எவ்வாறு 5,00,000 ரூபா வழங்க முடியும்? குற்றவாளியாகக் காணப்பட்ட பொலிஸ் சுப்பிரின்டன்ட் தர்மதாஸாவுக்கு அவரது மரணம் வரை பாதுகாப்பும், ஆயுதமும், வாகனமும், தேவைக்கதிகமான எரிபொருளும் அரசு எந்த அடிப்படையில் வழங்கியது?

இவ்வாறு முன்னாள் பிரதப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல விடுத்துள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார். இவ் அறிக்கையின் ஒரு பகுதி நேற்றைய எமது இதழிலும் வெளியிடப்பட்டிருந்தது. அவ் அறிக்கையில் மேலும்,

பாராளுமன்றத் தேர்தலின் போது நான் வடமத்தியமாகாணத்துக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தேன். அங்கும் கருப்பூனைகள் கொலைகளில் ஈடுபட்டார்கள் எப்பாவெலாகொலைகள் இதற்கொரு உதாரணம் சிறிமாவோ இது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கேள்விஎழுப்பினார். மார்ச் 24, 1989 இல சண் பத்திரிகையில் "யார் இந்தக் கருப்பூனைகள் - சிறிமாவோ கேள்வி" என்ற தலைப்பில் செய்தி வெளியானது இந்தக் கொலைகள் பற்றி விசாரிக்க புலனாய்வுப் பிரிவை அனுப்பப் போவதாக ரஞ்சன் விஜேரட்ணா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எனது பெயர் இதனுடன் சம்பந்தப்படுத்தப் பட்டதால் நான் விசாரணை மேற்கொள்ள இருந்தேன். மார்ச் 28 சண் பத்திரிகையில் "எப்பாவெல கொலைகளைப் பிடிக்க உடுகம்பொல நடவடிக்கை" என்ற தலைப்பில் செய்தி வந்தது. ஆனால் ஒரு புலனாய்வுப் பிரிவை அனுப்பிவைத்து நான் விசாரணையை மேற்கொள்வதைத் தடை செய்தார்கள்.

அண்மையில் தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் அடங்கியுள்ள உண்மைகள் சிலபற்றி என்னால் சாட்சியம் கூற முடியும் ஆள்மாறாட்டம் செய்வதற்காக யாத்திரிகர் தங்கு மிடமொன்றில் நூறு பேரை வைத்திருந்தார்கள். இது அனுராதபுரத்தில் நடந்தது குழப்பத்தையும், வன்முறையையும் தூண்டலாம் ஆள்மாறாட்டம் செய்ய முடியாது ஆகவே யு. என். பி. வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது

இது இப்படியிருக்க 15-1-92 இல் எனக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் 15-4 92 இல் இருந்து என்னை ஓய்வில் போகும் படியும், அதற்கு முன் கட்டாய லீவில் நிற்கும்படியும் பணிக்கப்பட்டிருந்தது இதிலிருந்து லியனாராச்சி வழக்கிற்கும் எனக்கும் தொடர்பில்லை என்பது தெளிவு -

லியனாராச்சி வழக்குத் தொடர்பாகத் தேடப்படும் பிரேமதாசா உடுகம்பொல இப்போது தலைமறைவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஞ்சன் விஜேரட்ணாவுக்குச் சகலதும் தெரியும். அவர் பாராளுமன்றத்தில் துணிகரமாக ஒரு அறிக்கையை வெளியிட்டதோடு ஜோ ஜிம்மிற்கெதிராக நடவடிக்கைகளை எடுத்தார். அமைச்சர் ரஞ்சன் கொலையுண்டது எனது கெட்டகாலம்.

# தனி. நிறுவன பொதிக்குள் 60 தங்கப் பாளங்கள்

(கொழும்பு)

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றிற்கு முகவரியிடப்பட்ட பொதியொன்றில் 38 இலட்சம் ரூபா பெறுமதியான சுமார் 60 தங்கப் பாளங்களை சுங்கப் பகுதியினர் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

இதையடுத்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் புலனாய்வுத் துறையினரின் உதவியைக் கோரியுள்ளனர்.

இந்தப் பொதியில் முகவரியிடப்பட்ட நிறுவனத்தை விசாரணையில் ஈடுபடுத்தியுள்ளனர். எனினும் அந் நிறுவனம் இது தொடர்பாக தமக்கு எந்த வித தகவலும் தெரியாது என கைவிரித்துள்ளது. எனினும் இது தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# விசர்நாய்கடிக் மரணங்களை தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துவரும் விசர்நாய்க் கடியையும் அதனால் ஏற்படும் பரிதாப மரணங்களையும் தடுத்து நிறுத்தும் முயற்சியை அனைத்துப் பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் ஊடாக மேற்கொள்வதென அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தீர்மானித்துள்ளது.

கடந்த இரண்டாம் திகதி சுகாதார வைத்திய அதிகாரியின்பணிமனையில்கூடிய மேற்படி இணையம் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதென ஏகமனதாக தீர்மானித்தது. சகல பிரதேச சபைகளூடாகவும் 8 வண்டிகளையாவது பெற்றுத் தரும்படி இணையம் அரசசார்பற்ற நிறுவனங்களை வேண்டுவது மக்களிடையே விசர் நாய்க்கடியினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து முகமாக ஒவ்வொரு பிரதேசசபையும் தமது பகுதிகளில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து கருத்தரங்குகளை நடாத்துதல், நாய்களைப் பிடிப்பதற்கு அவற்றுக்கு நஞ்சூட்டுவது பற்றிய பயிற்சியை வழங்குவது, பத்திரிகை வாயிலாக இதன் தாக்கங்களை மக்களுக்கு வெளியிடுவது, கட்டாக்காலி, குட்டி நாய்களை சேர்த்து அழிப்பதற்கு ஊக்குவிப்புப் பணம் வழங்குவது பெண்நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டுப்படைத் தலைமையக

# குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் ஒருவர்மீது வழக்கு

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புதொடர்பாக புறக்கோட்டை வர்த்தகரான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் என்பவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது

28ஜூன்91க்கும், 3 ஜூலை 91க்கும இடைப்பட்ட காலத்தில் பிளவர் வீதியில் குண்டு வெடிக்க இருப்பது தெரிந்திருந்தும் அதுபற்றிப் பொலிஸாருக்குத் தெரிவிக்கத் தவறியமை, கொட்டாஞ்சேனையில் குணேந்திரன், தர்மலிங்கம், பீ.ஏ.காதர், சந்திரசேகரம் ஆகியோருடன் சேர்ந்து வரதனுக்குப் புகலிடம் கொடுத்ததுடன் அதுபற்றிப் பொலிஸாருக்குத்தகவல் கொடுக்கத் தவறியது ஆகிய இரு குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவருக்குச் சொந்தமான சோடா லொறியிலேயே வரதன் தலவாக்கொல்லைக்குச் சென்றதாகச்சிறிலங்காபொலிஸார் நம்புகின்றனர்.

# சிறிலங்கா கடவுச்சீட்டுகள்; நேபாளத்தில் ஏற்க மறுப்பு

[கொழும்பு]

சிறிலங்கா பிரயாணிகள் காசோலைகளை நேபாளம் ஏற்க மறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அண்மையில் நேபாளம் சென்று திரும்

வங்கியும் வங்குரோத்து அடைந்து விட்டன என்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே சிறிலங்கா பிரயாணக் காசோலைகள் வெளிநாடுகளில் அவற்

# கல்வித் திணைக்களத்திற்கு 'ஓட்டோக்கள்' கிடைக்கலாம்

(கொழும்பு)

யாழ். கல்வித்திணைக்களத்தில் இணைந்துள்ள ஆறு கோட்டக் கல்வி அலுவலகங்களின் பாவனைக்கு 'ஓட்டோக்கள்' வழங்க மத்திய கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாக மேற்படி அமைச்சு வட்

கோட்டத்துக்கு ஒரு ஓட்டோ வாகனம் என்ற அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

க. பொ. த. சாதாரணம், உயர்தரம் பரீட்சைக் காலங்களில் பாவிப்பதற்கும், மற்றும்

# தற்கொலை முயற்சி

(சாவகச்சேரி)

குடும்ப வாழ்வில் விரக்தியடைந்த நபர் ஒருவர் தனக்குத்தானே கத்தியால் குத்திக் கொண்ட சம்பவம் ஒன்று சாவகச்சேரிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.ராசன் (வயது30)என்ற இளம் குடும்பஸ்தரே தனது நெஞ்சில் கத்தியால் குத்தியவராவார்.

தற்போது இவர் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச.க)

# லங்கா சிமெந்து பண்டிகை முற்பணம்

தமிழ் புத்தாண்டுமுற்பணம் தற்காலிக காரியாலயத்தில் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக வழங்கப்படும். ஊழியர்கள் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன்பு சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு மேற்படி நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஏழாவது தொடர் உணவு முத்திரை இன்று வியாழன் முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான உணவுமுத்திரைகள் நேற்று யாழ். செயலகத்தை வந்தடைந்துள்ளன. இவ் ஏழாவது உணவு முத்திரைத் தொடரில் சித்திரை மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு இது பயன்படுத்தப்படவுள்ளது. (ச)

# விபரங்களை பதிவுசெய்ய கோரிக்கை

தீவகத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது (காரைநகர் உட்பட) அங்கிருந்து வெளியேற முடியாது ராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளவர்களின் விபரங்களை இ. தி. ம. ந. கழகம் திரட்டி வருவதாகவும் மேற்படி இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளவர்களின் உறவினர்கள் அவர்களின் விபரங்களை இல. 65, புதிய வீதி, அத்தியடியில் அமைந்துள்ள தலை

...இப்புதிய தந்திரோபாயத்தை பாதுகாப்பு வட்டாரங்கள் சிந்திக்க வேண்டிவந்தது.

ஆனால் இப்புதிய தந்திரோபாயத்தில் இதுவரை சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் மேற்கொண்டுள்ள மாற்றங்களும், தந்திரங்களும் புதியவை எனக்கூறிவிட முடியாது. அதிகாரம் என்னிடம் இல்லை. அதுவே எனது தோல்விக்குக் காரணம் என்ற சாட்டை இம் மாற்றங்கள் சில வேளை குறைக்கலாம். ஆனால் இதன் மூலம் அரசு விரும்புவதுபோல் இப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கண்டுவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

பொறுப்புக்களை ஏற்கும் தளபதிகளுக்கு ஏற்பயுத்த தந்திரோபாயத்தில், நடவடிக்கைகளில் மாற்றம் அடையலாம். ஆனால், களத்தில் நிற்பவர்கள் சாதாரண சிப்பாய்களும், கனிஷ்ட அதிகாரிகளுமே. ஆனால் அவர்களிடம் இன்று போரிடும் மனோபலம் இல்லை. இந்நிலையில், புதிய தந்திரோபாயத்தால் நன்மை எதுவும் கிட்டுமா?

விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்டப் போரை 1990 ஜூனில் சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்தது அப்பொழுது கூட்டுப்படைத் தலைமையகம் செயற்படவில்லை. தளபதிகளிடமே அதிகாரங்கள் இருந்தன. ஆனால், புலிகளைத் அவர்களால் தோற்கடிக்க முடியவில்லை. கடந்த நவம்பரிலேயே மீண்டும் கூட்டுப் படைகள் தலைமையகத்திடம் அதிகாரங்கள் கைமாறின. ஆனால், அப்பொழுதும் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை தற்பொழுது மீண்டும் முப்படைத்தளபதிகளிடம் அதிகாரங்கள் மாறுவதனால் புலிகளைத் தோற்கடித்துவிட முடியுமா?

இதேவேளை கொழும்பில் தங்கியுள்ள குழுக்களுடன் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் சதி ஆலோசனை நடத்தியுள்ளன. ஆனால் இதிலும் புதிதாக எதுவுமில்லை. இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த போதும் தமிழ்க் குழுக்கள் இதையே செய்தார்கள் பின்பும், இதையே செய்கிறார்கள் ஆனால் புலிகளை அவர்களால் என்றும் தோற்கடிக்க முடியவில்லை. இனிமேலும் சாத்தியப்படப் போவதில்லை

ஏனெனில், தமிழ் மக்களின் அபிலாசைகளையும், உணர்வுகளையும் பிரதிபலிப்பவர்கள் விடுதலைப்புலிகள், அவர்கள் மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாக உள்ளார்கள். அத்தோடு தமிழின விடுதலைக்காகத் தமது உயிரையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளார்கள். தமிழீழத்தில் கடமையாற்றிய இந்திய 'பரா' இராணுவ துருப்பினருக்குப் பொறுப்பு வகித்த அதிகாரி அர்ஜீன் கடோஸ் குறிப்பிட்டது போன்று 'மக்கள். ஆதரவு அளிக்கும், விடுதலைப்புலிகள் போன்ற கட்டுக்கோப்பான இயக்கம் எதையும் எந்த இராணுவத்தாலும் வெற்றி கொள்ள முடியாது.' இதில் இந்தியாவாய் இருந்தாலென்ன சிறிலங்காவாய் இருந்தால் என்ன?புதிய தந்திரோபாயமாய் இருந்தாலென்ன? பழையதாக இருந்தாலென்ன? எத்தனை எட்டப்பர்கள் சேர்ந்தாலென்ன?

## சிறிலங்கா காசோலைகள்; நேபாளத்தில் ஏற்க மறுப்பு

[கொழும்பு]

சிறிலங்கா பிரயாணிகள் காசோலைகளை நேபாளம் ஏற்க மறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அண்மையில் நேபாளம் சென்று திரும்பிய அரசாங்க நிதியாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் வங்குரோத்து அடைந்து விட்டன என்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே சிறிலங்கா பிரயாணக் காசோலைகள் வெளிநாடுகளில் அவற்றின் நம்பகத் தன்மையை இழந்து விட்டன என்று மேலும் அவர் தெரிவித்தார்.

## 'ஓட்டோக்கள்' கிடைக்கலாம்

(கொழும்பு)

யாழ். கல்வித்திணைக்களத்தில் இணைந்துள்ள ஆறு கோட்டக் கல்வி அலுவலகங்களின் பாவனைக்கு 'ஓட்டோக்கள்' வழங்க மத்திய கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாக மேற்படி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து அனுப்பப்படவிருக்கும் ஓட்டோக்கள் கோட்டத்துக்கு ஒரு ஓட்டோ வாகனம் என்ற அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

க. பொ. த. சாதாரணம், உயர்தரம் பரீட்சைக் காலங்களில் பாவிப்பதற்கும், மற்றும் அலுவலக உபயோகத்திற்குமே இந்த ஓட்டோக்கள் வழங்கப் படவுள்ளன.

...போது (காரைநகர் உட்பட) அங்கிருந்து வெளியேற முடியாது ராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளவர்களின் விபரங்களை இ. தீ. ம. ந. கழகம் திரட்டி வருவதாகவும் மேற்படி இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளவர்களின் உறவினர்கள் அவர்களின் விபரங்களை இல. 65, புதிய வீதி, அத்தியடியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு, விபரங்களை தந்துதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

# ஜேர்மனியில் வெளியார் அதிகரிப்பால் மோசமான விளைவுகள் ஏற்படும்

## வலதுசாரிகள் எச்சரிக்கை

(பொன்)

ஜேர்மனியில் வெளிநாட்டவரின் குடியேற்ற பிரச்சினையைத் தீர்க்க பிரதான அரசியல் கட்சிகள் தவறிவிட்டது காரணமாக மீண்டும் வலதுசாரி தீவிரவாதிகள் பலம் பெற்று வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மேற்கு ராஜ்யமான பேடன்-வூர்ட்டெம்பேர்கில் நடைபெற்ற தேர்தலில் குடியேற்ற எதிர்ப்புக் கட்சியான குடியரசுக்கட்சி 10.9 சதவிகித ஆதரவைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டுகளுக்குப் பின் வலதுசாரி தீவிரவாதக் கட்சி ஒன்றுக்கு கிடைத்த ஆதரவுகளில் இதுவே மிக அதிகமானதாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'புகலிடம் கோருபவர்களின் வருகை தொடருமானால், அவர்கள் இங்கே தங்க ஆரம்பித்தால், அரசியல் அரங்கில் மோசமான விளைவுகள் ஏற்படும் எனக் கருதுகிறேன்' என வலதுசாரி ஜேர்மன் மக்கள் யூனியன் தலைவர் ஜெர்ஹாட் பிரே கூறினார்.

ஆனால் ஜேர்மனியில் அகதிகளைத் தடுக்கும் குடியேற்றச் சட்டம் இல்லை. ஜேர்மன் அகதிகள் சட்டம் மிகவும் தாராளத் தன்மை கொண்டதாகும். அகதிகளின் நிலைபற்றி முடிவு செய்யப்படும் வரை வருடக் கணக்கில் அரசாங்கத்தின் செலவில் அவர்கள் தங்க அது வாய்ப்பளிக்கிறது. பற்றாக் குறையாக இருக்கும் சமயத்தில் வீடுகளிலும், விடுதிகளிலும், பாடசாலை மண்டபங்களிலும் அகதிகள் தங்கி வருவதுடன் அவர்களுக்கு விசேட கிராமங்களை அமைக்க நகரங்கள் நிர்ப்பந்திக்கப்படுவது அண்மையிலுள்ள மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

தற்போது மாதம் ஒன்றுக்கு 35000 குடியேற்ற வாசிகள் ஜேர்மனிக்கு வருகிறார்கள்.

ஆனால், பிரதான கட்சிகள் இந்த வருகையைக் கட்டுப்படுத்துவதற்கும் ஜேர்மனியின் தாராள குடியேற்றச் சட்டத்திற்குமிடையே ஒரு இணக்கத்திற்கு வரத் தவறியுள்ளன.

அத்துடன் ஜேர்மன் ஐக்கியத்திற்குஅளிக்கப்படும் பணம் சம்பந்தமாகப் பிளவுபட்டிருக்கும் இருபிரதான அரசியல் கட்சிகளும் இப்போது அகதிகளின் பிரச்சினையால் வலதுசாரிகளின் சவாலையும் இப்போது எதிர் நோக்கியுள்ளது.

## ஈரான் தாக்குதல் குறித்து ஈராக் ஐ. நா. வில் முறையீடு

(பக்தாத்)

ஈரானிய விமானங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஈராக்கின் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தியதாக ஈராக் ஐ நா பாதுகாப்புச் சபையிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இதேவேளை ஈராக்கில் தளம் அமைத்து இயங்கிவரும் முஜாகிதீன்களும் ஆயுதம் தாங்கிய கோஷ்டிகளும் ஈராக்கில் இருந்து ஈரானிய கிராமங்கள் மீது தாக்குதல் நடத்திய பின்னரே ஈரான் தற்பாதுகாப்பிற்காக விமானத்தாக்குதல்களை நடத்தியதாக ஈரான் ஐநா பாதுகாப்புச் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பக்தாத்திலிருந்து எழுது கிலோ மீற்றர் தொலைவில இருக்கும் இராணுவத் தளம் ஒன்றின் மீது ஈரானிய விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளமை தெரிந்ததே.

பத்து ஆண்டுகள் நீடித்த ஈரான் ஈராக் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின் ஈரான் விமானத் தாக்குதல் நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

## குன்னக்குடி வைத்தியநாதனுக்கு தங்க வயலின் பரிசு

(சென்னை)

வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் 25 ஆண்டு சேவையை பாராட்டி அவருக்கு முதலமைச்சர் ஜெயலலிதா தங்க வயலின் ஒன்றை பரிசாக வழங்கியுள்ளார்

வயலின் வித்துவான்குன்னக்குடி வைத்தியநாதன் தனி வயலின் கச்சேரி நடத்த தொடங்கி 25 ஆண்டுகள் ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ - இஸ்லாமியபோர்; ஒன்றுதிரள லிபியா கோரிக்கை

(திரிப்போலி)

மேற்கத்திய நாடுகளின் கிறிஸ்தவம் இஸ்லாமுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிறது. எனவே இஸ்லாமிய நாடுகள் ஒன்று திரளுமாறு லிபியா கோரிக்கை விடுத்துள்ளது.

லிபியாவுக்கு எதிரான ஐ. நா. வின் பொருளாதாரத் தடையை அடுத்தே லிபியா இவ்வாறு கோரியுள்ளது.

46 இஸ்லாமிய நாடுகளைக் கொண்ட இஸ்லாமியக் கூட்டமைப்பு லிபியாவுக்கு எதிரான தடைகளைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதேவேளை, இன்று எகிப்தில் கூடவிருக்கும் அரபு லீக் அமைப்பு லிபியாவுக்கு எதிரான தடை குறித்து முக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பதற்றத்தைத் தணிக்க இந்தியா செயற்படும்

(புதுடில்லி)

பான்எம் விமானக் குண்டு வெடிப்பில் இரண்டு லிபியர்கள் சம்பந்தப்பட்டதாககூறப்படும் குற்றச் சாட்டின் அடிப்படையில் லிபியாவுக்கும் மற்றும் சில மேற்கு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்கும் வகையில் இந்தியா செயற்படும் என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் வரட்சி நிலைமைகளைப் பார்வையிடும் நோக்கில் சுற்றுப் பயணம் செய்த பிரதமர் நரசிம்மராவ் இந்தூரில் செய்தியாளர்களிடையே பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் சம்பந்தப்பட்டதான இரண்டு லிபியர்களையும் ஒப்படைக்க லிபியா மறுப்புத் தெரிவிப்பதால் மேற்கு நாடுகளுக்கும் லிபியாவுக்குமிடையே போர் மூளும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை எனவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# சகலரும் ஏற்றுக் கொள்ளும் ஜனாதிபதியை தெரிய முடியும்

-நரசிம்மராவ்

அடுத்தயூலை மாதம் தெரிவு செய்யப்படவிருக்கும் இந்திய ஜனாதிபதி சகல பிரதான கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு இந்துவாக இருக்கக்கூடும் என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

புது டில்லியில் நிருபர்கள் மத்தியில் பேசிய நரசிம்மராவ் இதனைத் தெரிவித்தார். 'சகல அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வேட்பாளரைப் பற்றி நாம் சிந்திக்க முடியும். அத்தகைய வேட்பாளர் ஒருவரை எம்மால் கண்டுபிடிக்க முடியும் என்பது நிச்சயம்' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில்தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இந்து ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக முன்வரவேண்டும் என்பது குறித்து அரசாங்கம் அறிந்திருக்கிறது என்றும் நரசிம்மராவ் குறிப்பிட்டார்.

இந்திய ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தின் இரு சபைகளைச் சேர்ந்த அங்கத்தினர்களாலும் மாநில சட்டசபை அங்கத்தினர்களாலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தெரிவு தெரிவுசெய்யப்படுகின்றார். ஜனாதிபதி வெங்கட்ராமனின் ஐந்தாண்டுப் பதவிக்காலம் வருகிற யூலை மாதம் முடிவடைகிறது

இதுவரை இந்தியாவில் ஜனாதிபதியாக பதவி வகித்த எட்டுப் பேர்களில் ஐவர் உயர் வகுப்பு இந்துக்கள் ஆவர். இருவர் முஸ்லிம்கள். ஒருவர் சீக்கியர்.

இந்நிலையில் வெங்கட்ராமன் மீண்டும் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படலாம் என இந்தியப்பத்திரிகைகள் கூறியுள்ளன. உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா பெற்றோலியம் அமைச்சர் பி சங்கரானந்த் உட்பட வேறு சிலரின் பெயர்களும் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படும் சாத்தியம் உண்டு என்றும்,

வெங்கட்ராமன், சர்மா ஆகிய இருவரும் பிராமணர்கள் என்றும், இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரே வேட்பாளராக சங்கரானந்த் மட்டுமே உள்ளதாகவும் இந்தியப் பத்திரிகைகள் கூறியுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## காவிரிநீரைத் திறந்து விட ஜெயலலிதா வற்புறுத்து

(சென்னை)

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக கர்நாடக அரசு செய்த முறையீட்டை நடுவர் மன்றம் நிராகரித்துள்ளதை தொடர்ந்து கர்நாடக அரசு மேலும் கால தாமதம் செய்யாமல் உரிய நேரத்தில் தமிழகத்திற்கு நீரைத் திறந்துவிட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் மத்திய அரசும் கர்நாடக மாநிலத்தை வலியுறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

### நிரந்தர

படுத்தலை அமுல் படுத்திய சிறிலங்கா அரசு இன்று தரப்படுத்தல் மட்டுமல்ல தமிழீழத்திலுள்ள கல்வி நிறுவனங்களின் தேவைகளை வழங்க மறுப்பதுடன் ஆசிரியநியமனத்தையே வழங்க மறுத்தது. இவ்வாறு தமிழீழ மக்களின் எதிர்கால கல்வியை சீரழிக்கின்ற நடவடிக்கையில் முனைப்புடன் இறங்கியுள்ளது. இந்த நிலையில் சிறிலங்கா அரசின் இம்மோசமான நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து தமிழீழ மக்களும், கல்விமான்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் அணிதிரண்டு போராட வேண்டும்.

சிங்களப் பிரதேசங்களைப் போன்று இங்கும் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப் படல் வேண்டும், எம்மண்ணில் ஆசிரியர், மாணவர் மீதான படுகொலைகள், கைதுசெய்து சித்திரவதை செய்தல் போன்றவை உடனடியாக நிறுத்தப் படல் வேண்டும். பாடசாலைகள் மீதான குண்டுவீச்சை நிறுத்த வேண்டும் கண்மூடித்தனமாக செய்யப்படும் கல்வி நிர்வாக சீர்குலைவு வேலை

## நுவரேலியாவில் 17 கடைகள் தீக்கிரை

(கொழும்பு)

நுவரெலியாவில் நேற்று முன்தினமிரவு பதினேழுகடைகள் தீக்கிரையானதாக தெரியவருகின்றது, அதிகாலை மூன்று மணியளவில் ஏற்பட்ட தீவிபத்துக்கான காரணமெதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும் இச் சம்பவத்துக்கான காரணங்கள் பற்றி அறிய புலன் விசாரணைகளை பொலிசார் முடுக்கி விட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது;

## இலங்கை செஞ்சிலுவைக்கு கனடா உதவி

(கொழும்பு)

கனேடிய அரசாங்கம் இலங்கையிலுள்ள செஞ்சிலுவைச சங்க சர்வதேச கமிட்டியின் 1992 ஆம் ஆண்டு செயல்திட்டங்களுக்காக மலும் பதினெட்டு இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்குகிறது என இலங்கையிலுள்ள கனேடியத் தூதுவர் நான்ஸி எம். ஸ்டைல்ஸ் தெரிவித்துள்ளார்.

கனேடிய அரசு ஏற்கனவே இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கி இருக்கிறது என்பது தெரிந்ததே.

தற்போது வழங்கப்பட்ட அன்பளிப்புத் தொகை இடம் பெயர்ந்தோர் நிவாரண நடவடிக்கைகளுக்கும், செஞ்சிலுவைச் சங்கப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும்,

## தமிழகக் கரையோரத்தில் மேலும் காவற் சாவடிகள்

(சென்னை)

தமிழ் நாட்டின் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாக தெரியவருகிறது. மேலும் இரு சோதனைச் சாவடி நிலையங்கள் ஏற்பட்டிருப்பதாக தஞ்சாவூர் மாவட்ட பொலிஸ் ஆணையாளர் ராஜேந்திரன் கூறியுள்ளார். அவர் மேலும் புதுப்பட்டினம் கொலனி, அம்மன் சத்திரம் ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டிருக்கும் புதிய சோதனை நிலையங்கள் நிரந்தர நிலையங்களாக செயற்படும் எனவும் தெரிவித்தார்.

### ரஞ்சன்

மீது தனியான வழக்கு ஒன்றும் இங்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

மேற்படி கொலை கூட்டுப் படைத் தலைமையகக் குண்டு வெடிப்புகள் தொடர்பாகஇருபது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளது தெரிந்ததே.

## 386-ம் நாள் நினைவஞ்சலி



## ஐ.தே.கட்சியை அன்று ஆதரித்தோர் இன்று எம்மை சூழ்ந்துள்ளனர்

-லலித் அத்துலத் முதலி

(மாத்தறை)

''அன்று ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தோர் இன்று அக் கட்சியில் நம்பிக்கையில்லாது எம்மை சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஐக்கிய தேசியக் கட்சி அதனை ஆதரித்தோரையெல்லாம் புறக்கணித்து வருவதே இதற்குக் காரணமாகும்'' என்று முன்னாள் அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகருமான லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

இக்கொடையில் நடைபெற்ற மேற்படி கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது;-

ஆட்சியிலிருக்கும் இன்றைய அரசாங்கம் பொய் கூறி வருகிறது. நாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் வெகுஜனத் தொடர்பாளர்களுக்கு நிச்சயம் வெகு பூரண சுதந்திரத்தை வழங்குவோம்.

யுத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய இன்றைய அரசாங்கத்துக்கு முடியாது. ஜனநாயகத்தை உரிய முறையில் பாதுகாப்பது எமது பொறுப்பு

ஜனநாயகத்திற்கு பரிசுத்தமான தலைமைத்துவம் தேவை. இளைஞர்களின் விரக்தியை போக்க அவர்களுக்கு தொழில் தேவை.

இன்று இந்த நாட்டிலே புத்தி ஜீவிகளுக்கும் மூளைசாலிகளுக்கும் இடமில்லை. அவர்கள் பின் தள்ளப்பட்டுள்ளனர் பொறியியலாளர்கள் தேவையில்லை என்றும் தச்சர்களும், மேசன்மார்களும் மாத்திரம் இருந்தால் போதும் என்று சிலர் கூறுகின்றனர் என்றும் லலித் அத்துலத்முதலி தனதுரையில் சொன்னார்.

### இலங்கைக்

எமக்குத் தலையிடி தரும்பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றது என சிறிலங்கா கடற்படை தளபதி கிளான்சி பெர்னான்டோ பலாலியில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் எம்மிடம் இருப்பதோ குறைந்த மூலவளங்கள் அவற்றை பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவே போதுமானதாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

### மயிரிழையில்

இடத்திற்கு சென்றடைந்தனர் அவர்களோடு யாசீர் அரபாத்திரிப்போலி வந்ததாகவும் பாலத்தீன விடுதலை இயக்க ஆலோசகர் அபாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது சூடானிலிருந்து தென் கிழக்கு லிபியாவிலுள்ள சாராப் பகுதியிலிருக்கும் பாலத்தீன விடுதலை இயக்கத்தின் முகாமொன்றிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாப் யாசீர் அரபாத் விமானம் மூலம் நேற்று முன்தினமிரவு புறப்பட்டார். அவர் பயணம் செய்த விமானம் சகாரா பாலைவனத்திற்கு மேலாகப் பயணம் செய்து கொண்டிருந்த போது நேற்று முன்தினமிரவு உள்ளூர் நேரப்படி எட்டு நாற்பது மணியள

### அரசாங்கம்

பொலிஸினால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கையில் பல பொய்யான விபரங்களும், மக்களைத் தவறான திசையில் வழிநடத்தக் கூடிய விடயங்களும் அடங்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் ரஞ்சன் விஜயரட்ண கொலை தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை என்று உடுகம்பொல கூறியுள்ளார். இத்தகைய புலனாய்வுகள் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பணியகம், (சி. டி. பி) குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி ஐ. டி.) என்பவற்றின் பணியாகும் என்று பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே இது உடுகம்பொல தலைமையில் இயங்கிய விசேட இயக்கங்கள் பணியகத்தின் பணியாக இருக்கவில்லை. புலனாய்வுகளின் அடிப்படையில் தான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது டன் ஏப்ரல் 27 ஆம் திகதி விசாரணைக்கும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விசேட இயக்கங்கள் பணியகம் தங்கம் மற்றும் போதைவஸ்து கடத்தல் என்பவற்றைக் கண்டுபிடிப்பதற்காகத் தாபிக்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும் உடுகம்பொல தலைமையிலான இக்குழுவினால் அவரது சகோதரரான மேஜர் பத்மசிறி உடுகம்பொல நாட்டுக்குள் தங்கத்தைக் கடத்திவர எடுத்த முயற்சியைத் தடுக்கவோ, கண்டுபிடிக்கவோ இயலாமற் போயுள்ளது இந்த விவகாரம் தற்பொழுது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

கறுப்பு பூனைகள் என்ற கொலையாளிக் குழுக்கள் உருவாக்கப்பட்டமைக்கு தமக்கு பொறுப்பு ஏதும்இல்லையென உடுகம்பொல கூறியுள்ளார். ஆனால் உடுகம்பொல கடமையாற்றிய எல்லாப் பிரதேசங்களிலும் முதலாவதாக தென் பகுதியிலும், பின்னர் வடமேல் மாகாணத்திலும் அதையடுத்து மத்திய மாகாணத்திலும் கறுப்பு பூனைகள் தோன்றியிருந்தன என்பது முக்கிய நிகழ்வாகும்.

### புதிய

திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, வடபகுதி மீதான தாக்குதல் இப்பொழுது தவிர்க்கப்படலாம் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## மரண அறிவித்தல்

### வை. சோமசுந்தரம்

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்தவரும், ஓய்வு பெற்ற பாடசாலை அதிபருமான வை. சோமசுந்தரம் காரைநகரில் காலமானார் என்று அறியவந்துள்ளது. இவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம், விஜயலட்சுமி, மகாலட்சுமி, ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இத்தகவலை உறுதி செய்தபின் மரணக் கிரியைகள் பற்றி உற்றார், உறவினர், நண்பருக்கு அறியத் தருவோம்.

தகவல்

என். ஸ்ரீஸ்கந்தராசா
உரிமையாளர்

784/1 பலாலி வீதி,

இலங்கை.

**விஞ்ஞான பீட முதலாம் அரையாண்டுப் பரீட்சை 1991**

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளை யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து 09-04-92 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

-பதிவாளர்

(சி/4129)

---

...ணமாக செய்யப்படும் கல்வி நிர்வாக சீர்குலைவு வேலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். உரிய காலத்தில் பரீட்சைகளை நடத்துவதுடன் அ காலத்தில் ஊர ங்கு அமுலபடு தப்படுத்து நிறுத்தபடல் வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (சர)

**அடையாள**

விடுதலைப் புலிகள் மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் திரு. பரா பிரதம விருந்தினராகவும்' யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் - டிவகலால வும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (24)


○○○ சீமாட்டி ○○○

**புதுவருட மலிவு விற்பனை**

எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு !

என்றுமில்லாதவாறு விலை குறைப்பு!!

தவறாது பயன்படுத்துங்கள் !!!

★ சைனா சீத்தை
★ தாறிகா வோயில் சாறி
★ உறையூர் பருத்திச் சேலைகள்
★ மாட்டின், ஜோன் கூப்பர் சேட் வகைகள்

இன்னும் பல ஜவுளி ரகங்கள் !

**சீமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ்,**

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4131)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




**2ஆம் லெப் ராஜு**

**(நவநீதநாதன் - சுரேஸ்குமார்)**

சேச்வீதி சங்கானை

| தாயின் மடியில் | தாயக விடிவில் |
|---|---|
| 08-08-71 | 19-03-91 |

19-03-91 அன்று இடம் பெற்ற சிலாபத்துறை இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய இம் மாவீரனை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

(சி/4132)

---

...படி எட்டு நாற்பது மணியளவில் தரைக் கட்டுப்பாட்டுடனான வானொலித் தொடர்பை இழந்தது.

இதனைத் தொடர்ந்து லிபியாவின் சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், சர்வதேச செய்மதி நிறுவனங்கள், வளிமண்டல அவதானிப்பு நிலையங்கள் என்பவற்றின் உதவியை நாடியிருந்தது

சுமார் பன்னிரண்டு மணி நேரத் தீவிர தேடுதலின் பின்னர் அமெரிக்கச் செய்மதி ஒன்று யாசிர் அரபாத் பயணம் செய்த விமானத்தைக் கண்டு பிடித்தது. லிபியாவின் அல் சாராநகரிலிருந்து எழுபது கிலோ மீற்றர் தொலைவில் இவ்விமானம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

**அன்னை**

யளவில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் ஆரம்பித்தது இதில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஓமந்தைப் பிரதேசப் பொறுப்பாளர் பால்ராஜ் மற்றும் வன்னி மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நிருபன், வன்னி மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ரமணன் உட்பட மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறஇராணுவ முகாம்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணை வீச்சுக்களும், துப்பாக்கிப் பிரயோகமும் இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

எனினும் பல்வேறு இடங்களிலும் பொது மக்கள் தோரணங்கள் கட்டியும், பந்தல்கள் அமைத்தும் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

---



784/1 பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி
(சி/4133)

உரிமையாளர்
ஸ்ரீகண்ணன் ஸ்ரோர்ஸ்


---

**45 ஆம் நாள் நினைவஞ்சலியும்**

**அந்தியேட்டி அழைப்பும்**



வீரப் பிறப்பு
1971.02.24

வீரச்சாவு
1992.02.25

1992-02-22 அன்று வீமன்காமம் காவலரண் தகர்ப்பு முயற்சியின் போது காயமடைந்து 1992-02-25 அன்று தனது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

**லெப். சுரேஸ்**

(சின்னத்துரை தயாபரன்)

தமிழ்த் தாயின் துயர் துடைக்க
தீரமுடன் போராடும்
வீர வேங்கையாக — உன்னை
தீவகம் தந்துவிட
வீறு கொண்டு சென்றாயே
வீமன் காமத்திலே
அன்னியரின் காவலரண்
அடியுடனே தகர்த்தெறிந்து
மாவீரன் ஆகி விட்டாய்
உன் பாத சுவடுகளில்
எம் பாதம் தொடர்ந்துவிடும்
நீ கண்ட கனவு ஓர் நாள்
நிச்சயமாய் பலித்துவிடும்.

லெப் சுரேஸ் (சின்னத்துரை தயாபரன்) அவர்களின் 45 ஆம் நாள் நினைவஞ்சலியை நினைவு கூருகின்றோம். ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் இவரது அந்தியேட்டியிலும் (இன்று) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மண்டைதீவு,
4ஆம் வட்டாரம்.
(மானிப்பாய்
கனகசபை வீதி)

பெற்றோர், சகோதரர்கள்,
மாமன்மார், மாமிமார்
குடும்பம்,
இவரது நண்பர்கள்.

(2434)